கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு **190/2018**

வாதிகள் தரப்பு சாட்சி – 1 **சுப்பிரமணி** என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 09.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வா.சா.1 – சுப்பிரமணி – முதல் விசாரணை தொடர்ச்சி**

1. 29.01.2026 ம் தேதியிட்ட மாவட்ட ஆட்சி தலைவரால் வழங்கப்பட்ட தகவல் அறிவிப்பு அசல் வா.சா.ஆ–8
2. 17.02.2014 ம் தேதியிட்ட வீட்டுவரி இரசீது அசல் வா.சா.ஆ.9
3. மின் கட்டண இரசீதுகள் (28 எண்ணிக்கை ) அசல் வா.சா.ஆ.10
4. வீட்டு வரி இரசீதுகள் (4 எண்ணிக்கை ) அசல் வா.சா.ஆ.11
5. அருக்காணியம்மாள் பெயரில் உள்ள மின் கட்டண அட்டை அசல் வா.சா.ஆ.12
6. நீதிமன்ற ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1**
7. நீதிமன்ற ஆணையர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2**

**முதல் விசாரணை முடிக்கப்பட்டது.**

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து எவ்வாறு எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சங்கம் பரியாறி மற்றும் சிதம்பரம் பண்டிதர் ஆகியோர் சேர்ந்து எனது தந்தைக்கு வாய்க்காரராக கொடுத்துவிட்டார்கள். எந்த வருடம் கொடுத்தார்கள் என்றால் வருடம் நினைவில்லை. சுமார் 50 வருடங்களுக்கு முன்பு இருக்கும். இவ்வழக்கு தாக்கல் செய்த போது எனது தாயார் அருக்காணியம்மாளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மறந்துவிட்டேன். இவ்வழக்கு தாக்கல் செய்த போது எனது தந்தை உயிருடன் இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்த போது எனது தாயார் அருக்காணியம்மாள் உயிருடன் தான் இருந்தார் என்றால் சரிதான்.

2.	அவர் என்னுடன் தான் இருந்தார். இவ்வழக்கு தாக்கல் செய்த போது ஏன் எனது தாயாரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் விவரம் கூறினேன். அவர் சேர்க்கவில்லை. இவ்வழக்கு தாக்கல் செய்த போது தாவா சொத்து சிதம்பரம் பண்டிதர் மற்றும் சங்கன் பரியாறிக்கு பாத்தியப்பட்டது என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் வழக்கறிஞர் சொல்ல தவறிவிட்டார். எனக்கு சரியாக படிக்க தெரியாது. தாவா சொத்து அருக்காணியம்மாளுக்கு அவரது தந்தை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்று வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3.	எனது அசல் வழக்குரையில் தாவா சொத்தினை எத்தனை வருடங்களாக அனுபவம் செய்து வருவதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். திருத்தப்பட்ட பிராதிலும் குறிப்பிட்டு தாவா சொத்தில் எத்தனை வருடங்களாக அனுபவம் செய்து வருகிறோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனது வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். எனது வழக்கறிஞருக்கு யார் விவரம் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். முதல் நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்ற போது யார் சொத்தை அடையாளம் காண்பித்தது என்றால் நானும், எனது வழக்கறிஞரும் காட்டினோம். நான் சரியாக தான் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையருக்கு அடையாளம் காண்பித்தேன் என்றால் சரிதான்.

4.	நீதிமன்ற ஆணையர் வந்த போது பிரதிவாதிகள் இல்லை என்றால் சரிதான். முதல் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நான் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி முதல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை என் மூலமாக என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டு எனது முதல் விசாரணையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தில் உள்ள விவரங்கள் சரியானது என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தில் எந்த தவறுகள் என்னால் கண்டறியப்படவில்லை என்றால் சரிதான்.

5.	மறுபடியும் நீதிமன்ற ஆணையர் நியமனம் எனது வழக்கறிஞரிடம்

நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தான் சொன்னேன். என்ன காரணத்திற்காக மறு ஆணையர் நியமனம் கோரினேன் என்றால் எனக்கு முதலில் முன்னிலையாகிய வழக்கறிஞர் மீது சந்தேகம் இருந்ததால் மீண்டும் மனு தாக்கல் செய்தேன். முதல் நீதிமன்ற ஆணையரின் வரைபடம் மற்றும் அறிக்கையில் எந்த சந்தேகமும் இல்லை என்றால் சரிதான். நான் நீதிமன்ற ஆணையர் நியமனம் வேண்டி இரண்டாவதாக தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் முதலில் வந்த நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை தவறுதலாக பார்வையிட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. மேற்படி விவரங்கள் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான். முதல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கும், 2வது ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கும் எவ்வித வேறுபாடுகளும் இல்லை என்றால் சரிதான். என்னை கடந்த சுமார் 4 வருடங்களுக்கு முன்பு முதல் விசாரணை செய்த பின்பு என்ன காரணத்திற்காக இவ்வழக்கை சரிவர நடத்தாமல் மீண்டும் நீதிமன்ற ஆணையர் நியமனம் வேண்டி மனு தாக்கல் செய்தேன் என்றால் பிரதிவாதிகள் தொடர்ச்சியாக பிரச்சனை செய்ததால் தாக்கல் செய்தேன். சர்வே எண்.426/1 யை பொறுத்து பல வழக்குகள் இருப்பதாக நான் வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல.

7. நான் விவசாயம் செய்கிறேன். நான் படிக்கவில்லை. எனது சகோதரும் படிக்கவில்லை. நாங்கள் படிக்கவில்லை என்றும், எழுத படிக்க தெரியாது என்றும் எனது வழக்குரையிலும் மற்றும் திருத்தப்பட்ட வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதலில் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. எனது வழக்கறிஞர் எனக்கு விவரம் சொல்லவில்லை. ஆனால் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் முதலில் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திலோ, தற்போது தாக்கல் செய்த கூடுதல் நிரூபண வாக்குமூலத்திலோ, வழக்குரையிலோ சொல்லியுள்ள சொத்து விவரங்களை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

8. தற்போது எனக்காக முன்னிலையாகியுள்ள வழக்கறிஞர் எனக்கு விவரங்கள் சொல்லியுள்ளார். எனது வழக்குரையில் 7ம் பத்தியில் சொல்லியுள்ள விவரங்கள் சரிதான் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் சம்மந்தமாக பல வழக்குகள் உள்ளது என்றும், அதில் நானும், எனது சகோதரரும் தரப்பினர்கள் என்றால் சரிதான். எனது சகோதருக்கு முன்பாக எனது தந்தை தரப்பினராக இருந்தார். தாவா சொத்தில் வீடு கட்டுவதற்கு அனுமதி வாங்கியுள்ளோமா என்றால் தாவா வீடு எனது தந்தை காலத்தில் பல வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது.

9. அதற்கு அனுமதி எதுவும் பெறவில்லை. எனது வழக்குரையில் எனது தகப்பனார் தாவா சொத்தினை கையகப்படுத்தி தனது ஆயுட்காலத்தில் ஓட்டுவீடு கட்டி அனுபவம் செய்து வந்ததாக பத்தி 5ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு பட்டா எங்கள் பெயரில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் சிதம்பரம் பண்டிதர் மற்றும் சங்கன் பரியாறி பெயரில் உள்ளது. தாவா சொத்துக்கள் உட்பிரிவாகியுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து சம்மந்தமாக சின்னுபிள்ளை பெயரில் உள்ள வா.சா.ஆ.2 ஒரே ஒரு வீட்டுவரி இரசீது மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

10. சர்வே எண்.426/1ல் எத்தனை கட்டிடங்கள் உள்ளது என்றால் எனக்கு பாத்தியப்பட்ட 3 கட்டிங்கள் உள்ளன. சர்வே எண்.426/1Aற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். நான் 2013ம் வழக்கு தாக்கல் செய்த பின்பு அதை மீறி 1ம் பிரதிவாதியால் மேற்படி பட்டாவானது பெறப்பட்டுள்ளது. சர்வே எண்.426/1யை பொறுத்து 33 நபர்கள் பெயரில் கூட்டாக பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்படி கூட்டு பட்டா எனது பெயர் இல்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த போதே தாவா சொத்திற்கான பட்டாவில் எங்கள் பெயர் இல்லை என்ற விவரம் எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான்.

11. சமீபத்தில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்திருந்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு எங்கள் தரப்பில் ஆட்சேபனை எதுவும் தாக்கல்

செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பட்டா சம்மந்தமாக வருவாய் துறையினரிடம் பட்டா மாற்றம் செய்தது தவறு என்று மனு அளித்தேனா என்றால் பத்திரம் எதுவும் செய்துவிடக்கூடாது என்று மனு தாக்கல் செய்திருந்தேன். எனது அசல் வழக்குரையின் சொத்து விவரத்தில் தாவா சொத்தில் உள்ள வீடு மற்றும் கடைகளின் கதவு எண்கள் மற்றும் மின் இணைப்பு எண் ஆகியவற்றை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

12. அசல் வழக்குரையை திருத்தும் போது தான் மேற்படி விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்குரையை திருத்தம் செய்ய தாக்கல் செய்திருந்த மனுவில் தாவா சொத்தின் கதவு எண், மின் இணைப்பு எண், நீள மற்றும் அகலம் ஆகியவை அசல் வழக்குரையில் சொல்ல தவறியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான செட்டில்மென்ட் அ பதிவேடு ஆவணத்தில் எனது பெயர் இல்லை என்றால் எனது பெயர் இருப்பதாக நான் சொல்லவில்லை.

13. எனது வீட்டின் கதவு எண் என்ன என்றால் நினைவில்லை. கடந்த 50 வருடங்களாக ஒரே கதவு எண் தான் உள்ளதா என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி இரசீதுகளுக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து நத்தம் நிலம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 செட்டில்மென்ட் அ பதிவேட்டில் சர்வே எண்.426/1 தாவா சொத்து இரயத்துவாரி புன்செய் நிலம் என்று உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.8 ஆவணம் என்னால் மனு தாக்கல் செய்யப்பட்டு வாங்கப்பட்டது தான் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.8 ஆவணம் பெறுவதற்கான மனுவை யார் எழுதி கொடுத்தது என்றால் நான் தான் எழுதினேன்.

14. தாவா சொத்து கீழப்பகுதி கிராமத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள விவரங்கள் சரிதான் என்றால் ஆமாம். தாவா சொத்து நத்தம் நிலத்தில் உள்ளதாக சொல்வது பொய் என்றால் சரிதான். சிதம்பர பண்டிதர் வகையறாவினர் தாவா சொத்தை பொறுத்து எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால்

சரிதான். மேற்படி வழக்களில் தாவா சொத்தை அவர்கள் அனுபவம் செய்து வருவதாகவும், எனக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று கூறியுள்ளார்கள் என்றால் சரிதான்.

15. மேற்படி வழக்குகளை சிதம்பரம் பண்டிதரின் வாரிசுகள் தாக்கல் செய்துள்ள நிலையில் அவர்கள் வாரிசுகள் விவரம் பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். 2 வது முறையாக நீதிமன்ற அணையரின் அறிக்கையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி அறிக்கையில் கதவு எண்.3/52, நில அளவை எண்.3/63 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் 2 வது நீதிமன்ற ஆணையருக்கு அடையாளம் காண்பித்த சொத்தும் தவறானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி இரசீதுகள் தரகம்பட்டி நடுப்பகுதியில் நான் குடியிருக்கும் வீட்டின் இரசீதுகள் என்றால் சரியல்ல.

16. 2 வது நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் ஓட்டுவில்லை வீட்டின் மின் இணைப்பிலிருந்து ஜெயம் பேன்சி டோருக்கும், ராஜேஷ் கோழி கடைக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரங்கள் 1 வது நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் இல்லை என்றால் அவர் சொல்லவில்லை. சாட்சியங்களை சேகரிப்பதற்காக 2 வது முறையாக நீதிமன்ற ஆணையர் நியமனம் வேண்டி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எந்த வருடம் மின் இணைப்பு பெறப்பட்டது என்றால் இவ்வழக்கிற்கு பின் 2018 ம் வருடம் வாங்கப்பட்டது.

17. நான் தாக்கல் செய்த மின் இணைப்பு ஆவணங்கள் வழக்கிற்கு பின் பெறப்பட்டதால் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. **(சாட்சி மீண்டும் வழக்கிற்கு முன்பே மேற்படி மின் இணைப்பு பெறப்பட்டதாக கூறுகிறார்.)** மேற்படி மின் இணைப்பு வணிக மின் இணைப்பா என்றால் கடைக்கான மின் இணைப்பாகும். வீட்டிற்கு தனியாக மின் இணைப்பு இல்லை என்றால் சரியல்ல. வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளது. அதே மின் இணைப்பில் தான் கடைக்கும்

கொடுக்கப்பட்டுள்ளது. வீட்டிற்கு தனியாக மின் இணைப்பு பெறவில்லை என்றால் மின் இணைப்பு பெறும் போதே கடைக்காக மின் இணைப்பு பெற்றுவிட்டோம். அதை வீட்டிற்கும் பயன்படுத்தி வருகிறோம். நான் தாக்கல் செய்துள்ள மின் இணைப்பு இரசீதுகள் (வா.சா.ஆ–10) அனைத்தும் 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்குரியது என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**